செய்தி வெளியீடு எண்: 524 நாள் : 01.10.2013

செய்தி வெளியீடு

# <u>அம்மா திட்டம் (AMMA- Assured Maximum Service to Marginal People in All Villages)</u>

வருவாய்த் துறை மூலம் அனைத்து கிராமங்களிலும் அடித்தட்டு மக்களுக்கு அதிக சேவையை வழங்குவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட திட்டமான **“<u>அம்மா திட்டம்</u>”**, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் 24.02.2013 அன்று ஈரோடு மாவட்டத்தில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. தற்போது அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் சிறப்பாக நடை பெற்று வருகிறது.

அம்மா திட்டத்தின் மூலம் வருவாய்த் துறை அலுவலர்கள், வட்டாட்சியர் தலைமையிலான குழு, ஒவ்வொரு கிராமத்திற்கும் **<u>பிரதிவாரம் செவ்வாய்க் கிழமை</u>** சென்று அக்கிராம மக்களுடைய குறைகளைக் கேட்டறிந்து, மனுக்களைப் பெற்று, அவ்விண்ணப்பங்களை ஆய்வு செய்து உடனடியாக ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு வருகிறது. இச்சீரிய திட்டத்தின் மூலம் ஆறு மாத காலத்திற்குள் தமிழகத்தில் உள்ள 16,671 வருவாய் கிராமங்களுக்கும் சென்று முதல் சுற்றிலேயே குறைகள் முழுவதையும் தீர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அம்மா திட்டத்தின் கீழ் 2013 செப்டம்பர் 20–ந்தேதி வரை 32,69,952 மனுக்கள் பெறப்பட்டு அவற்றில் 26,78,140 மனுக்கள் முடிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் உள்ளாட்சி அமைப்பின் மக்கள் பிரதிநிதிகளுடன், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற பேரவை உறுப்பினர்கள் அம்மா திட்டத்தில் கலந்து கொள்ள ஒவ்வொரு வாரமும் **<u>செவ்வாய் கிழமைகளில்</u>** நடைபெற்று வரும் அம்மா திட்ட முகாமை **<u>வெள்ளிக் கிழமைகளில்</u>** வைத்துக் கொண்டால் நன்மை பயக்கும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளதை அடுத்து அம்மா திட்ட முகாமை பிரதிவாரம் வெள்ளிக் கிழமைகளில் மாற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்திரவிட்டுள்ளார்.

எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி அரசு வருவாய்த் துறை தனது 18.09.2013 நாளிட்ட கடிதத்தில் அனைத்து மாவட்டங்களிலும் பிரதிவாரம் செவ்வாய் கிழமை அன்று நடத்தப்பட்டு வந்த **அம்மா திட்டம்** முகாமை **<u>பிரதிவாரம் வெள்ளிக்கிழமை</u>** நடத்த அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அறிவுரை வழங்கியுள்ளது.

இத்திட்டம் மக்களிடையே மிகப்பெரிய வரவேற்பை பெற்றுள்ளதால், இத்திட்டத்தை தொடர்ந்து சீரிய முறையில் நடத்த அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் உத்தரவு கொடுக்கப் பட்டுள்ளது.

செயலாளர், வருவாய்த்துறை

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.